# உள், மதுவிலக்கு மற்றும்
# ஆயத்தீர்வைத் துறை

**நீதி நிருவாகம்**

**மானியக் கோரிக்கை எண்–3**

**சிறைச்சாலைகள்**

**மானியக் கோரிக்கை எண்–24**

# அறிவிப்புகள்

# 2014–2015

**எஸ்.பி. வேலுமணி**

**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,**

**நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## நீதி நிருவாகம்

## அறிவிப்புகள்

**1. காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல்**

**Construction of Combined Court Buildings and quarters for Judicial Officers at Maduranthagam in Kancheepuram District**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தில் வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் சார்பு நீதிமன்றம் மற்றும் இதர நீதிமன்றங்களின் உள்கட்டமைப்பு வசதியின்மையை கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் ரூ.**9.48** கோடி செலவில் கட்டப்படும்.

**2. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிபதிக்கு குடியிருப்பு கட்டுதல்**

**Construction of Combined Court buildings and Quarters for District Munsif at Musiri in Tiruchirappalli district**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** முசிறியில் இயங்கி வரும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிபதிக்கான குடியிருப்பு ரூ.4.71 கோடி செலவில் கட்டப்படும்.

**3. திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுதல்**

**Construction of Combined Court buildings at Thuraiyur in Tiruchirappalli district**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** துறையூரில் தற்போது இயங்கி வரும் நீதிமன்றக் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளதால் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் ரூ.3.75 கோடி செலவில் கட்டப்படும்.

**4. நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல்**

**Construction of post attached quarters for Judicial Officers at Namakkal in Namakkal district**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதி–II ஆகியோருக்கான குடியிருப்புகள் ரூ.1.48 கோடி செலவில் கட்டப்படும்.

**5. திருப்பூர் மாவட்டம், அவினாசியில் சார்பு நீதிமன்றம் அமைத்தல்**

**Constitution of Sub Court at Avinashi in Tiruppur district**

நீண்டகாலமாக நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டு மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** திருப்பூர் மாவட்டம், அவினாசியில் ரூ.1.24 கோடி செலவில் சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

**6. அரியலூர் மாவட்டம், அரியலூரில் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்**

**Constitution of Chief Judicial Magistrate Court at Ariyalur in Ariyalur district**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** அரியலூர் மாவட்டம், அரியலூரில் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
ரூ.63 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**7. திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்**

**Constitution of Judicial Magistrate Court at Chengam in Tiruvannamalai district**

திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்திலுள்ள முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை மாற்றியமைப்பதன் மூலம் செங்கத்தில் புதிய குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.

## 8. கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்

## Constitution of Judicial Magistrate Court at Uthangarai in Krishnagiri district

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையிலுள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** இம்மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தை மாற்றியமைப்பதன் மூலம் ஊத்தங்கரையில் புதிய குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.

## 9. மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் மாபெரும் மக்கள் நீதிமன்றங்கள் நடத்துதல்

## Conducting of Lok Adalats and Mega Lok Adalats

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** மாநில சட்டப்பணிகள்
ஆணைக்குழு, உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழுக்கள், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள் மற்றும் வட்ட சட்டப்பணிகள் குழுக்கள் முதலியவற்றில் மக்கள்

நீதிமன்றங்கள் மற்றும் மாபெரும் மக்கள் நீதிமன்றங்களை திறம்பட நடத்த ரூ.2.97 கோடி வழங்கப்படும்.

## 10. சட்ட அறிவு விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்

## Conducting of Legal Literacy Awareness Camps

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் கிராமப் பகுதிகளில் சட்ட அறிவு விழிப்புணர்வு முகாம்கள் நடத்த ரூ.83 இலட்சம் வழங்கப்படும்.

## 11. சென்னை உயர்நீதிமன்றத்திற்கு இரும்பு அலமாரிகள் (Steel Racks) வழங்குதல்

## Provision of Steel Racks for the High Court of Madras

சென்னை உயர்நீதிமன்றத்தில் தற்போது வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டு இருப்பதால் வழக்கு கட்டுகளை வைப்பதற்கு இரும்பு அலமாரிகள் வாங்குவதற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** ரூ.3.19 கோடி வழங்கப்படும்.

# சிறைத்துறை

## அறிவிப்புகள்

1. **சிறைத் தொழிற்கூடங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை தங்கு–தடையின்றி வழங்க “மூலப்பொருள் இருப்பு மையம்” ஒன்றை நிறுவ ரூ.5 கோடி தொகுப்பு நிதி ஏற்படுத்துதல்**

**Creation of a Corpus Fund of Rs.5 crores to build “Raw Material Bank” for uninterrupted supply of raw materials to Prison Industries**

சிறைத் தொழிற்கூடங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை
வாங்குவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்படும் நிதி, அத்தொழிற் கூடங்கள் முழு அளவில் இயங்கத் தேவைப்படும் மூலப்பொருட்களை வழங்க போதுமானதாக இல்லை. எனவே சிறைத் தொழிற்கூடங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை தங்கு தடையின்றி வழங்க, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** ‘‘மூலப்பொருள் இருப்பு மையம்’’ ஒன்றை நிறுவ ரூ.5 கோடி தொகுப்பு நிதி ஏற்படுத்தப்படும்.
இதன் மூலம் சிறைத் தொழிற்கூடங்கள் தொடர்ந்து இயங்குவது உறுதி செய்யப்படுகிறது.

## 2. தாமிரபரணி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு மத்திய சிறை, பாளையங்கோட்டைக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தூய குடிநீர் வழங்குதல்

## Provision of Dedicated Water Supply Scheme to Central Prison, Palayamkottai with river Tamiraparani as source, through TWAD Board

பாளையங்கோட்டை மத்திய சிறையில் நிலவிவரும் குடிநீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணவும், சிறைவாசிகள் மற்றும்
பணியாளர்களின் நலன் காக்கவும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** ரூ.1.55 கோடி செலவில் தாமிரபரணி ஆற்றில் இருந்து கிடைக்கும் நீரை ஆதாரமாகக் கொண்டு, பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு தூய்மையான குடிநீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும்.

## 3. திருச்சியில் உள்ள பெண்கள் தனிச்சிறையில் முழுமையான அனைத்து வசதிகளுடன் கூடிய தையற்கூடம் ஒன்றை நிறுவுதல்

## Setting up of a full-fledged Tailoring Unit in Special Prison for Women at Trichy

பொதுவாக தையற்கலையில் பெண்கள் அதிக ஆர்வம் உடையவர்கள். ஆதலால், அவர்களுக்கு தையற் கலையை

எளிதாகக் கற்பிக்க இயலும். எனவே, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** திருச்சியில் உள்ள பெண்கள் தனிச்சிறையில் ரூ.5 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்களுடன் கூடிய தையற்கூடம் ஒன்று நிறுவப்படும்.

**4. பொங்கல் பண்டிகை, குடியரசு தினம், சுதந்திர தினம், காந்தி பிறந்த நாள் போன்ற நாட்களில் சிறைவாசிகளுக்கு அளிக்கப்படும் சிறப்பு உணவிற்காக வழங்கப்படும் தொகையை உயர்த்தி வழங்குதல்**

**Enhancement of the amount sanctioned for special Diet to the Prisoners on the occasion of Pongal, Republic Day, Independence Day and Gandhi Jayanthi**

பொங்கல் பண்டிகை, குடியரசு தினம், சுதந்திர தினம் மற்றும் காந்தி பிறந்த நாள் போன்ற நாட்களில் சிறைவாசிகளுக்கு அளிக்கப்படும் சிறப்பு உணவிற்காக சிறைவாசி ஒருவருக்கு ரூ.5/– வீதம் செலவழிக்கப்பட்டுவருகிறது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** ஒரு சிறைவாசிக்கு சிறப்பு உணவளிக்க வழங்கப்பட்டு வரும் தொகை ரூ.5ல் இருந்து ரூ.50 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால்

ஆண்டொன்றுக்கு ரூ.25 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

**5. தமிழ்நாடு சிறை நல நிதிக்கு வழங்கப்படும் இணை மானியத்தை ரூ.3.00 இலட்சத்திலிருந்து ரூ.10.00 இலட்சமாக உயர்த்துதல்**

## Enhancement of Annual Matching Grant for Tamil Nadu Jail Benevolent Fund

தமிழ்நாடு சிறை நல நிதிக்கு தற்போது ஆண்டுதோறும் அரசால் வழங்கப்படும் இணை மானியத் தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும். **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு சிறை நல நிதிக்கு தற்பொழுது அரசால் வழங்கப்பட்டு வரும் இணை மானியத் தொகை ரூ.3.00 இலட்சத்தில் இருந்து ரூ.10.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

**6. சிறைத்துறையின் மோப்பநாய் பிரிவில் உள்ள நாய்களுக்கு வழங்கப்படும் உணவுப்படியை அதிகரித்தல்**

## Enhancement of Diet Allowance to the Dogs in the Dog squad

சிறைத்துறையின் மோப்ப நாய் பிரிவில் உள்ள நாய் ஒன்றுக்கு உணவளிக்க தற்போது நாள் ஒன்றுக்கு

வழங்கப்பட்டு வரும் உணவுப்படி ரூ.100/– ஆகும். **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சிறைத்துறையில் உள்ள மோப்ப நாய்களுக்கு வழங்கப்படும் உணவுப்படியானது ரூ.100/–ல் இருந்து ரூ.200/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**7. சிறைத்துறையில் பணியாற்றும் களப் பணியாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்க சிறைத்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி அதிகார உச்ச வரம்பினை உயர்த்துதல்**

**Enhancement of financial powers of the Prison Department officers to sanction money rewards to field staff**

சில குறிப்பிட்ட நேர்வுகளில் சிறைத்துறையில் பணியாற்றும் களப் பணியாளர்களுக்கு உயர் அதிகாரிகள் ரொக்கப் பரிசு வழங்கி ஊக்குவிக்கின்றனர். **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** இந்த நிதி அதிகார உச்சவரம்பு ஆண்டு ஒன்றுக்கு மொத்த செலவினம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல், கீழ்கண்டவாறு மாற்றியமைக்கப்படும்.

| வ. எண். | அலுவலர்கள் | தனி நபருக்கு வழங்கும் ரொக்கப் பரிசிற்கான உச்ச வரம்பு | குழுவினருக்கு வழங்கும் ரொக்கப் பரிசிற்கான உச்ச வரம்பு |
|---|---|---|---|
| 1. | கூடுதல் காவல் துறை இயக்குநர்/ சிறைத்துறைத் தலைவர் | ரூ.250ல் இருந்து ரூ.1000 | ரூ.500ல் இருந்து ரூ.10,000 |
| 2. | சிறைத்துறைத் துணைத் தலைவர் | ரூ.150ல் இருந்து ரூ.500 | ரூ.300ல் இருந்து ரூ.5000 |
| 3. | சிறைக் கண்காணிப்பாளர் | ரூ.50ல் இருந்து ரூ.300 | ரூ.150ல் இருந்து ரூ.1500 |

## 8. கூடுதல் காவல் துறை இயக்குநர் / சிறைத்துறை தலைவர் அலுவலகத்திற்கு ஒரு முதுநிலை நிர்வாக அலுவலர் பணியிடம் தோற்றுவித்தல்

## Creation of one post of Senior Administrative Officer in the Office of the Additional Director General of Police / Inspector General of Prisons

காவல் துறையில் உள்ளது போல் கூடுதல் காவல்துறை இயக்குநர் / சிறைத்துறைத் தலைவர் அவர்களுக்கும் நிர்வாகம், கணக்கு, தணிக்கை ஆகியவற்றில் உதவி புரிவதற்கு ஏதுவாக, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, கூடுதல் காவல்துறை இயக்குநர் / சிறைத்துறைத் தலைவர் அலுவலகத்தில் முதுநிலை நிர்வாக அலுவலர் பணியிடம் ஒன்று தோற்றுவிக்கப்படும். இதற்கான செலவினம் சிறைத்துறையில் உள்ள சில பணியிடங்களை ஒப்படைப்பு செய்வதன் மூலம் ஈடுசெய்யப்படும்.